ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

# லய வாத்யங்களின் வளர்ச்சி

முனைவர். ச. பா. பத்மசங்கர்,
உதவி பேராசிரியர்,
ஸ்ரீ ஸத்குரு ஸங்கீத வித்யாலயம்
தல்லாகுளம், மதுரை - 2

9

**ஆய்வு சுருக்கம்:-**

"லய வாத்யங்களின் வளர்ச்சி" என்ற தலைப்பில் கர்நாடக சங்கீத இசைகச்சேரிகளில் முதன்மையாக பயன்படுத்தப்படும் லய வாத்யங்களின் வளர்ச்சி இந்த தலைப்பில் விளக்கப்பட்டுள்ளது. லய வாத்யங்களின் வளர்ச்சியை முன்னிறுத்தி லய வாத்ய வித்வான்களும் வளர்ச்சி பெற்றுள்ளனர். பெயர், புகழ், அந்தஸ்து, வருமானம் என லய வாத்யம் அனைவருக்கும் கைகொடுத்துள்ளது என்பதை இந்த ஆய்வில் காணலாம்.

**ஆய்வு நோக்கம்:-**

லய வாத்யங்கள் என்றால் பக்கவாத்யங்கள் என்றே பொருள்படும் வகையில் கர்நாடக இசை அமைந்துள்ளது. பக்கவாத்யங்களின் அமர்வு பாடகருக்கு வலது பக்கத்தில் மிருதங்கமும் , மிருதங்க வித்வானின் இடது புறத்தில் உபபக்க வாத்யங்கள் அமர்ந்திருப்பது இயல்பு. லய வாத்ய வித்வான்களின் வளர்ச்சியால் தங்களது ஞானத்தையும் திறமையையும் காட்ட லய வின்யாச நிகழ்ச்சிகளை நடத்தினர். அதன் வெற்றியே தங்களது லய வாத்யத்தை நடுவில் நாயகனாக முன்னிறுத்தி நாத சங்கம நிகழ்ச்சிகளை நடத்தினார்கள். இதில் உபபக்க வாத்ய கலைஞர்களுக்கும் அதே அந்தஸ்து கிடைத்தது. எனவே இனிவரும் இளம் தலைமுறையினரும் லயவாத்யத்தில் நம்பிக்கையோடு வித்வத்தை விருத்தி செய்தால் அவர்களுக்கும் நடு நாயக அந்தஸ்து காத்திருக்கின்றது என்பது இந்த ஆய்வின் நோக்கமாக கருதப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:-** லய வாத்யங்கள் – தோற்கருவிகள் – தாள வாத்யங்கள் – பக்க வாத்யங்கள் - உப பக்கவாத்யங்கள் – அரங்கிசை கருவிகள் - செவ்விசைக்கான பக்கவாத்யங்கள் – முழவு இசைக் கருவிகள்

**முன்னுரை**

**"ஸ்ருதி மாதா லய பிதா"** என்பது இசையின் கோட்பாடு. உலகில் உள்ள எல்லா இசைகளுக்கும் இந்த வாக்யமே முதன்மையானது. ஸ்ருதி, ஸ்வரங்கள் எந்தளவிற்கு இசைக்கு முக்கியத்துவமோ அதே அளவிற்கு லயமும் முக்கியம். சிவனின் வாத்யம் உடுக்கை, நந்திகேஸ்வர வாத்யம் மிருதங்கம், மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத (நாச்சியார் திருமொழி) , ஞானவாள் ஏந்தும் ஐயர் நாதப்பறை அறைமின்! (திருவாசகம் – திருப்படை எழுச்சி) என புராணங்களிலும் , இதிகாசங்களிலும் லயவாத்யங்களுக்கான குறிப்புகள் காணப்பட்டன. அதே போல் சங்கீதத்தின் முதன்மை இசை இலக்கண நூல்களாக போற்றப்படும் நாட்டிய சாஸ்திரம் , சங்கீத ரத்னாகரம் , பஞ்ச மரபு , சங்கிரஹ சூடாமணி போன்ற லக்ஷண கிரந்தகளில் லயவாத்யங்களின் பெயர்கள் மற்றும் தன்மையைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. தண்ணும்மை, மத்தளம், இடக்கை, முரசு, பறை, குடமுழா, சிறுபறை, டமருதம், தொண்டகம் போன்ற லய வாத்யங்கள் தற்போது உள்ள அனைத்து வாத்யங்களுக்கும் முன்னோடியாக இருந்துள்ளன.

நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியால் சில வாத்யங்கள் படிப்படியாக

வளர்ச்சியடைந்துள்ளன. மிருதங்கம் , கஞ்சிரா, கடம், கொன்னக்கோல், முகர்சிங் ஆகிய லய வாத்யங்கள் அதன் அடிப்படை கூறுகளிலிருந்தும் , வாசிக்கும் திறனிலிருந்தும் பல்வேறு விதமான நிலைகளில் வளர்ச்சி பெற்றுள்ளது. தற்பொழுது பக்கவாத்யமாகவும், முதன்மை வாத்யமாகவும், சிறப்பு எய்தி வருகின்றது. மிருதங்கம் மற்றும் உபபக்க வாத்யங்களின் நவீன வளர்ச்சி எவ்வாறு பல்வேறு நிலைகளைக் கடந்து வளர்ச்சி பெற்றுள்ளது என்பதனை விளக்கும் விதமாக இந்த கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

**மிருதங்கம்:**

லய வாத்யங்களில் இதிகாச காலம் தொட்டு இக்காலம் வரை முதன்மை இடத்திலும் , கர்நாடக சங்கீதத்தில் முதல் லய பக்கவாத்யமும் மிருதங்கத்திற்கே உரியதாகும். மத்தளத்தில் இருந்து தான் மிருதங்கம் உருவானது என்ற ஆய்வு கருத்தும் உள்ளது. **நாராயணசாமி அப்பா** என்பவர் தான் முதல் மிருதங்க வித்வான், இவர் தான் முதன் முதலில் கச்சேரியில் வாசிப்பதற்கும், மிருதங்க பாட முறைகளை ஏற்படுத்திக் கொடுத்தார். இதனால் தான் **நாராயண சாமி அப்பா** அவர்களை மிருதங்க வித்வான்களின் பிதா மகர் என்று இன்றளவும் அழைக்கின்றோம்.

கதாகாலட்சேபம், தேவாரம், திருவாசகம், திருப்புகழ், போன்றவற்றிற்கு மிருதங்கம் பக்கவாத்யமாக வாசிக்கப்பட்டு வந்தது. சங்கீத மூவர்கள் காலத்திற்கு பிறகு கச்சேரி பத்ததி தோற்றுவிக்கப்பட்டது. வர்ணம் , கீர்த்தனை, தில்லானா சொற்கட்டுகள் மற்றும் கல்பனா ஸ்வரங்களுக்கு ஸ்ருதியோடு கூடிய லயத்துடன் மிருதங்கத்தில் மட்டுமே வாசிக்க இயலும்.

**மிருதங்கத்தின் வளர்ச்சி:**

மண்ணிலிருந்து மரக்கட்டைக்கு மாற்றப்பெற்ற மிருதங்கம் , பலாகட்டை, தென்னைமரக்கட்டை என்று இருந்தது. தற்பொழுது **"Fiber"** ஆல் மிருதங்கம் செய்யப்படுகிறது. இந்த மாதிரி "Fiber மிருதங்கம்" எடை குறைவாக உள்ளதால் வீதி உலா பஜனை மற்றும் உஞ்ச விருத்திக்கு தற்பொழுது பயன்படுத்தப்பட்டு வருகிறது. வலந்தலை மற்றும் இடந்தலை தோல்களை இழுத்து பிடித்து தோற்வார்கள் கட்டப்பட்டு இருக்கும். தற்பொழுது **"BOLT NUT"**, **"ROPE"** பயன்படுத்தப்பட்டு வருகிறது. வெளிநாட்டு பயணங்களின் போது மிருதங்கத்தினை இரண்டு பாகங்களாக பிரித்துக் கொண்டு செல்கின்றனர். கச்சேரிக்கு முன்பாக அவ்வாத்தியத்தினை இணைக்கிறார்கள். இதனை மிருதங்க வித்வான் பிரபஞ்சம் ரவீந்திரன் அவர்கள் கண்டுபிடித்து உள்ளார். தட்ப வெப்ப காலங்களில் ஸ்ருதி அமைப்பு மாறாமல் வித்வான்களுக்கும், கலைஞர்களுக்கும் கை கொடுக்கும் வகையில் மிருதங்க வாத்யத்தின் அமைப்பு வளர்ச்சி பெற்றுள்ளது. மிருதங்க நாதத்தை ஈர்க்கும் வகையில் ப்ரத்யேகமான **"மைக்"** தற்பொழுது கச்சேரிகளிலும், ஒலிப்பதிவுகளிலும் பயன்படுத்தப்படுகிறது.

**லயவாத்ய வித்வான்களின் வளர்ச்சி**

பஞ்ச பூத சக்திகளை உள்ளடக்கிய இந்த வாத்யத்தினை வாசிக்கும் பொழுது வித்வான்களுக்கு அதீத கற்பனையும் , ஞானமும் ஏற்படுவது இயல்பு. அதனாலயே மிருதங்கத்தினால் வித்வான்களும் , வித்வான்களால் மிருதங்கமும் வளர்ச்சி அடைந்தது.

கர்நாடக சங்கீத உலகில் தாளத்தின் ராஜ வாத்யமாக கருதப்படுவது மிருதங்கம். மிருதங்க வித்வான் பாடுபவர்க்கு வலது பக்கத்தில் பாடுபவரை நோக்கி அமர்ந்திருப்பர். இது பொதுவான கச்சேரி இருக்கை அமைப்பு ஆகும். இதில் மிருதங்க வித்வானுக்கு இரண்டு மணி நேர கச்சேரியில் 10 நிமிடம் மட்டும் அவருடைய கற்பனை மற்றும் லயவின்யாச ஞானத்தை காட்ட தனி ஆவர்த்தனம் வழங்கப்படும். இதனால் பல வித்வான்களுக்கு தனக்கு தோன்றிய லய ப்ரயோகங்களை வாசிக்க

இயலாமல் போனது. பாடும் வித்வான்களை பொறுத்தே இவர்களின் லய அணுகுமுறை மாறிக் கொண்டே இருந்தது. இதனால் மிருதங்க வித்வான்களுக்கு முழு சுதந்திரம் கிடைக்கவில்லை. இதனாலேயே மிருதங்க வித்வான்கள் லய வாத்யங்களைக்
கொண்டு கச்சேரிகள் செய்ய தொடங்கினர். வீணை , வயலின், புல்லாங்குழல், கோட்டு வாத்யம் என ஏதேனும் ஒரு ஸ்வர வாத்யத்தை கொண்டு கீர்த்தனைகளுக்கு முன்பும் , பின்பும் பல அபிப்பிராயங்கள் மற்றும் லய கணக்குகளை வாசிக்கின்றனர். பல உபபக்கவாத்யங்களைக் கொண்டு நடத்துவதால் தனி ஆவர்த்தனம் 30 நிமிடம் வரை வாசிக்கின்றார்கள். மேடையில் பாடகர் அமர்ந்திருக்கும் இடத்தில் மிருதங்கம் நடுவில் அமர்ந்து கச்சேரியின் கதாநாயகனாக மாறுகின்றது.

கர்நாடக சங்கீத ரசிகர்களிடம் லய வாத்ய நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக கொண்டு சென்ற வித்வான்கள், குரு காரைக்குடி மணி, எல்லா வெங்கடேஷ்வர ராவ், திருவாரூர் பக்தவத்சலம், திருச்சி சங்கரன் போன்றோர்கள் ஆவர். இவர்கள் கச்சேரிகள் மட்டுமில்லாமல் ஒலிப்பதிவுகளும் வெளியிட்டுள்ளார்கள்.

அதிகமான உபபக்கவாத்யங்களை பயன்படுத்தி நாத சங்கமம் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இது கர்நாடக சங்கீத சபாக்கள் , திருவிழா கச்சேரி , திருமணவிழா கச்சேரி மற்றும் இதர நிகழ்ச்சிகளிலும் லய வாத்ய கச்சேரிகள் நடத்தப்பெறுகின்றன. இதில் நவ வாத்ய சங்கமம் , தசவாத்ய சங்கமம், சப்த வாத்ய சங்கமம் என முழு மேடையையும் லய வாத்யங்களே அலங்கரிக்கின்றன,

கர்நாடக இசையில் மட்டுமல்லாது வட இந்திய இசைக்கருவிகளுடனும் , மேற்கத்ய இசைக்கருவிகளுடனும் மிருதங்கம் வாசிக்கப்படுகின்றது. ஜுகல் பந்தி , ப்யூசன் (Fusion), என்சம்பில் (Ensemble), மங்கள இசை போன்ற பல வாத்ய நிகழ்வுகளில் மிருதங்கம் இன்றியமையாத இடத்தை பெற்றுள்ளது.

இசைக்கருவிகளில் ப்ரத்யேகமாக வாசிப்பதற்கு ப்ரத்யேகமான பல கீர்த்தனைகள் உள்ளது. மல்லாரி உருப்படிகளை பலவிதமான தாளங்களில் அமைத்து கச்சேரியின் ஆரம்பத்தில் களைகட்ட வைக்கிறார்கள். மிருதங்க வித்வான் திருவாரூர் பக்தவத்சலம் அவர்களின் இசை நிகழ்ச்சிகளில் முத்ல் உருப்படியாக மல்லாரி வாசிக்கப்படுகிறது. குரு காரைக்குடி மணி அவர்களின் நிகழ்ச்சியில் வாதாபி கணபதீம் கீர்த்தனையின் அனுபல்லவியில் "வீதராஹினம் வினுத யோகினம் " இடத்தில் தாள அபிப்பராயங்களை விதவிதமாக வாசிப்பது சிறப்பாக இருக்கும்.

திருப்பதி தேவஸ்தான "நாதநீராஞ்சனம்" நிகழ்ச்சியில் எல்லா வெங்கடேஷ்வரராவ் அவர்கள் தியாகராஜ சுவாமிகளின் கீர்த்தனையான நகுமோமு – ஆபேரி ராக ஆதி தாள கீர்த்தனையில் கீர்த்தனையின் பல்லவி , அனுபல்லவி, சரணம் என தனித்தனியாக லய பிரஸ்தாங்களை வாசித்து சிறப்பித்துள்ளார்.

தியாகராஜ சுவாமியின் பிரபலமான ஸ்ரீராக பஞ்ச ரத்ன கீர்த்தனையானது , ஆதிதாளம் ஒரு அஷ்ரம் தள்ளி "எந்தரோ" (பல்லவி) எடுப்பு இருக்கும். அதற்கு தகுந்தாற்போல் மிருதங்க வித்வான் மதுரை Dr. K. தியாகராஜன் அவர்கள் கீர்த்தனைக்கு முன்பே மிருதங்கத்தில் அபிப்ராயங்களை வாசித்து முத்தாய்ப்பாக "எந்தரோ" என்று மிருதங்கத்தில் அதன் தத்தகாரத்தை வாசித்ததும் கீர்த்தனை எடுக்கப்படுவது எடுப்பிற்கு தனிப்பட்ட அழகை கொடுக்கிறது.

லய வாத்யகாரர்கள் லயத்திற்கு விறுவிறுப்பை கொடுக்கும் கீர்த்தனைகளை கச்சேரிகளில்

பெரிதும் பயன்படுத்துவதை பெரிதும் விரும்புவார்கள். உதாரணமாக சில. நின்னுவினா – நவரஸ கன்னட, ரகுவம்ச சுதா – கதன குதூகலம், போசம்போ – ரேவதி போன்ற கீர்த்தனைகளுக்கும், ஸ்வாதி திருநாள், லால்குடி ஜெயராமன், பாலமுரளி கிருஷ்ணா மற்றும் லயவித்வான்களின் சொந்த சாஹித்ய தில்லானாக்களும் வாத்ய விருந்தாக்களில் இடம்பெறுகின்றது. கண்டதிருபுட, மிஸ்ரஜம்பை, சங்கீர்ண த்ருபுடை, சதுஸ்ர மட்டிய போன்ற அரிதான தாளங்களில் பல்லவிகளை சுயமாக அமைத்து தனக்கு தோன்றிய லய நுணுக்களையும் அபிப்ராயங்களையும் வாசித்து ரசிகர்களை மகிழ்விப்பார்கள்.

ராகம், தானம், பல்லவியில் பல்லவியின் அமைப்பை மிருதங்க வித்வான்கள் சிறப்பாக அமைக்கிறார்கள். தாளமாலிகாபல்லவி , த்விராகபல்லவி, நடை பல்லவி , கதி பல்லவி , பஞ்ச கதி பல்லவி என பல விதமான பல்லவி அமைப்புகளை மிருதங்க வித்வான்கள் இயற்றுகிறார்கள். இது தவிர முந்தைய தலைமுறை வித்வான்கள் ஆதிதாளத்தில் மட்டுமே தனி ஆவர்த்தனம் செய்துள்ளார்கள். இப்போது உள்ள வித்வான்கள் பாடகர்கள் பல்லவிக்கு தகுந்தாற்போல் உருவாக்கும் கடினமான தாளங்களுக்கும் தனி ஆவர்த்தனம் வாசித்து வித்வான்களின் லய ஞான வளர்ச்சியை நிருபிக்கின்றார்கள்.

**சாதனைகள்:-**

திருவாரூர் பக்தவத்சலம் அவர்கள் 2010 – ம் ஆண்டு மைசூரில் 108 மிருதங்கங்களை கொண்டு மிருதங்க லய வின்யாசம் செய்தார். 2014 – ம் ஆண்டு மதுரை Dr. K. தியாகராஜன் அவர்கள் 35 தாளங்களுக்கான மொஹராகோர்வை ஓலி-ஒளி குறுந்தகடு வெளியீட்டு விழாவில் அவரது சிஷ்யர்கள் 35 பேர் லயவின்யாச நிகழ்ச்சி நடத்தினார்கள். மிருதங்க வித்வான் கானாடுகாத்தான் M. ராஜாராமன் அவர்கள் தொடர்ந்து 25 மணிநேரம் பக்கவாத்யமாக மிருதங்கம் வாசித்து சாதனை புரிந்துள்ளார். குழல் மன்னம் G. ராமகிருஷ்ணன் அவர்கள் தொடர்ந்து 84 மணிநேரம் மிருதங்கத்தில் தனி ஆவர்த்தனம் செய்து கின்னஸ் சாதனை பதிவு செய்துள்ளார்.

அரசவை ஆஸ்தான வித்வான், சமஸ்தான வித்வான், சங்கீத கலாநிதி, பத்ம பூஷண், பத்ம ஸ்ரீ, கலைமாமணி போன்ற இசை உலகில் வழங்கப்படும் அனைத்து உயரிய விருதுகளையும் மிருதங்க வித்வான்கள் பெற்றுள்ளனர். இது மிருதங்க வாத்யகாரர்களின் வளர்ச்சியை குறிப்பதாகும்.

**குருபூஜை விழாக்கள்:-**

மிருதங்கத்தினால் வித்வான்களும், வித்வான்களால் மிருதங்கமும் ஒன்றோடு ஒன்று இணைந்து வளர்ச்சி பெற்றது. மிருதங்க லயத்தில் புதுமைகளும் , புரட்சிகளும் செய்தவர்களை இக்கலையுலகம் மறந்துவிடுவதில்லை. மறைந்த வித்வான்களின் காலத்திற்கு பின்பும் அவர்களது நினைவாக இசையஞ்சலி மற்றும் லய அர்ப்பண நிகழ்வுகளும் நடந்து கொண்டு தான் வருகிறது. உதாரணமாக சில. புதுக்கோட்டை ஸ்ரீமான் தக்ஷிணாமூர்த்திபிள்ளை அவர்களுக்கு , அவரது சிஷ்ய பரம்பரையினர் புதுக்கோட்டையில் ஜீவசமாதி ஆலயம் கட்டி குருபூஜை செய்து வருகிறார்கள். புதுக்கோட்டை மட்டுமல்லாது, திருச்சி, மதுரை, சென்னை, கும்பகோணம் போன்ற இடங்களில் இவருக்கு குருபூஜை விழாக்கள் நடைபெற்று வருகின்றது. மதுரை D. ராமசாமி அய்யங்கார் அவர்களுக்கு , நினைவு இசைவிழா அவரது ப்ரதான சிஷ்யர்கள் Dr. K. தியாகராஜன் அவர்கள் மற்றும் ஆடிட்டர் நாராயணன் இணைந்து நடத்துகிறார்கள். சென்னையில்

பழனி சுப்ரமணியபிள்ளை அவர்களுக்கு , திருச்சி சங்கரன் அவர்கள் தலைமையில் நினைவு இசையஞ்சலி விழா நடத்துகிறார்கள். ராமநாதபுரம் C. S. முருகபூபதி அவர்களுக்கு மதுரையில் நினைவு இசையஞ்சலி விழா நடத்தப்படுகின்றது.

கர்நாடக இசை , கிராமிய இசை , கலந்திசை, திரையிசை என எந்தவொரு வாத்ய விருந்தாக்களிலும் மிருதங்கம் இடம் பெறாமல் இல்லை. லயம் பற்றிய எந்தவொரு ஆய்வும் மிருதங்கத்தைப் பற்றி சொல்லாமல் கடப்பதில்லை. இது மிருதங்கத்தின் மிகப்பெரிய வளர்ச்சியைக் குறிக்கின்றது.

**கஞ்சிரா:**

மிருதங்கத்திற்கு அடுத்தபடியாக இருக்கும் ஒரு லயவாத்யம் கஞ்சிரா , உப பக்க வாத்யங்களில் முதன்மையானது. மிருதங்கத்தைப் போல கஞ்சிராவிற்கும் முன்னோடி வாத்யங்கள் உண்டு. இருந்த போதிலும் இந்த வாத்யத்திற்கு உருவ அமைப்பும் , உயிர் கொடுத்தவரும் புதுக்கோட்டை ஸ்ரீ. மான்பூண்டியா பிள்ளை அவர்களைச் சாரும். **"மிருதங்க பிதாமகர் நாராயணசாமி அப்பா"** அவர்களின் உதவியால் இதற்கு பக்க வாத்யக் கருவியாக அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது. அதன்பின் , மான்பூண்டியா பிள்ளையின் சிஷ்யர்கள் புதுக்கோட்டை தஷிணாமூர்த்தி பிள்ளை , பழனி சுப்ரமணிய பிள்ளை, இராமநாதபுரம் சிற்சபை சேர்வை போன்ற வித்வான்களும் மற்றும் அவர்களது சிஷ்யபாரம்பரிய வித்வான்களும் கஞ்சிராவை முதன்மை உபபக்கவாத்யமாக நிலைநிறுத்தினார்கள். மிருதங்கத்தில் வாசிக்கப்படும் அனைத்து விதமான சொற்களையும் கஞ்சிராவில் ஒரு கையால் வாசிக்க இயலும், இது கஞ்சிராவின் ஒரு சிறப்பு ஆகும்.

**கஞ்சிராவின் வளர்ச்சி:**

லாடின் பெர்குஷன் , ரெமோ போன்ற வெளிநாட்டு கம்பெனிகள் இழுபடும் தன்மையுள்ள பதப்படுத்திய பாலிஸ்டர் நூல் இழைகளால் செய்யப்பட்ட ஒரு துணி போன்ற பொருளை உடும்புத் தோலுக்கு பதிலாக பயன்படுத்தி கஞ்சிராக்களை தயாரிக்கின்றனர். தோலினால் செய்யப்பட்ட கஞ்சிராவினைப் போன்று தண்ணீர் தெளித்து பக்குவமாக பயன்படுத்த வேண்டியதில்லை. அனைத்து கால சூழ்நிலைகளுக்கும் கஞ்சிராவின் நாதம் பக்குவமாக இருக்கும். இதுவும் கஞ்சிராவின் வளர்ச்சி ஆகும்.

**கஞ்சிரா வித்வான்களின் வளர்ச்சி:**

கஞ்சிரா, ஹிந்துஸ்தானி லயவாத்யங்களுடன் (உதாரணமாக கஞ்சிரா – தபேலா; கஞ்சிரா – பக்கவாஜ்) இணைந்து ஜீகல்பந்தி நிகழ்ச்சிகளில் வாசிக்கப்பட்டு வருகின்றது. கஞ்சிரா வித்வான் V. செல்வகணேஷ் அவர்கள் மேற்கத்ய வாத்யங்களுடன் இணைந்து கலப்பிசை நிகழ்ச்சிகள் நிகழ்த்தியுள்ளார். Rock Band, Indian Ocean என்ற தலைப்புகளில் கலப்பிசை குறுந்தகடுகள் வெளியிட்டுள்ளார்கள். கஞ்சிரா நால்வர் என்ற பெயருடன் கஞ்சிரா வித்வான்களான B. S. புருஷோத்தமன், அனிருத் ஆத்ரேயா , சுந்தர்குமார், K.V. கோபாலகிருஷ்ணன் ஆகியோர் குழுவாக இணைந்து ***"லய சதுரா"*** எனும் கஞ்சிராவை மட்டும் வைத்து தனி லய இசை நிகழ்ச்சிகள் நடத்திவருகிறார்கள்.

**கடம்:**

19 - ம் நூற்றாண்டில் நாட்டுப்புற கலைகளில் பயன்படுத்திய குடம் போன்ற வடிவிலான வாத்யத்தை கர்நாடக சங்கீதத்திற்கு ஏற்றவாறு மாற்றியமைத்தவர் போலகம் சிதம்பர ஐயர் ஆவார்.

அதன் பின்னர் பழனி கிருஷ்ண ஐயர் கடத்திற்கான சொற்களையும் , வாசிக்கும் முறையையும் மேம்படுத்தினார்.

**கடம் – வாத்யத்தின் வளர்ச்சி:**

மானாமதுரை மண்ணினால் ஆன கடத்திற்கு தனி நாதம் உண்டு. அதனாலே மானாமதுரை கடம் பெயர்பெற்று விளங்குகிறது , சென்னை, பெங்களூர் போன்ற ஊர்களில் உள்ள மண்களிலும் , ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் உள்ள மண்களிலும் கடம் தயார் செய்யப்படுகின்றது. கடம் உருவாக்க செய்யப்படும் மண்ணில் தங்கம் அல்லது வெள்ளி சிறிதளவு சேர்த்து வடிவமைக்கிறார்கள். இதனால் அந்த கடம் மேடையில் ஒளிர்கின்றது. இந்த வாத்யத்திற்கு ப்ரத்யோகமான மைக் தற்கால வித்வான்கள் பயன்படுத்துகின்றனர்.

மிருதங்கத்திற்கு அடுத்த உப பக்க வாத்யமான் கஞ்சிராவிற்கு அடுத்து கடம் வாசிக்கப்படுகின்றது. 10 விரல்களாலும் சொற்கள் வாசிக்கும் கருவி கடம் ஒன்றே ஆகும். கடம் வாத்யத்தில் தோன்றும் கற்பனை மற்றும் லய நுணுக்கங்களை வாசிக்க கடம் வித்வான்கள் மேடையில் கதாநாயகர்களாக கடத்துடன் அமர்ந்து கச்சேரியை வழி நடத்துகிறார்கள். ஸ்ருதியோடு கூடிய ஸ்லோகங்களை தாள சந்தங்களுடன் கூறி அதனை கடத்தில் வாசித்து சிறப்பு சேர்க்கிறார்கள்.

கர்நாடக இசையில் உபபக்க வாத்யங்களில் ஜொலித்த கடம் , தற்போது ஹிந்துஸ்தானி, ஜுகல் பந்தியிலும் பங்களிக்கின்றது. கலப்பிசை நிகழ்ச்சிகளிலும் பியானோ , தபேலா, கடம், டிரம்ஸ் என கடம் தனது தனித்தன்மையான நாதத்தைக் கொண்டு ப்ரத்யோகமாக விளங்குகின்றது.
ஸரிகமபதநி – ஸ்வரங்களுக்கு தக்கவாறு கடங்களை வைத்துக்கொண்டு “கடதரங்கம்” என்ற நிகழ்வை பிரபல கடம் விதுஷி
ஸ்ரீமதி. சுகன்யா ராம்கோபால் அவர்களால் நிகழ்த்தப்பட்டு வருகிறது இதற்கு வயலின் மிருதங்கம் பக்க வாத்யமாக வாசிக்கப்படுகிறது.

கடத்தினை அடுத்த பரிமாணத்திற்கு கொண்டு சென்றவர் H. விநாயக்ராம் அவர்களைச் சாரும். 1966 - ல் M.S. சுப்புலட்சுமி அவர்களுக்கு உபபக்க வாத்யமாக ஐ. நா சபையில் கச்சேரி ஒன்றில் வாசித்தார். இதனை சங்கீத விமர்சகர் கொத்தமங்கலம் சுப்பு அவர்கள் **“இந்திய மண் ஐ. நா சபையில் பேசியது ”** என்று கடத்திற்கு புகழாரம் சூட்டினார். இசைக்கலைஞர்கள் உலக அரங்கில் பெருமையாக கருதப்படும் “கிராமி” விருதினை 1996-ம் ஆண்டு பெற்றார். பத்மஸ்ரீ , பத்மபூஷண் போன்ற விருதுகளையும் பெற்றுள்ளார். 1970 -ல் களில் fusion நிகழ்ச்சிகள் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொழுது சக்தி , J. G. LAYA, PLANET DRUMS போன்ற இசைக்குழுக்களில் கடம் இவரால் முக்கிய பங்காற்றியது. கடம் கார்த்திக் , V. சுரேஷ், மங்களூர் குமார் போன்றவர்கள் கடத்தில் லய வின்யாச நிகழ்ச்சிகள் வெற்றிகரமாக நிகழ்த்தி வருகிறார்கள்.

திரை இசையில் பல இசை அமைப்பாளர்கள் மிருதங்கத்திற்கு அடுத்த படியாக கடம் அதிகமாக பயன்படுத்துகிறார்கள். நாட்டுப்புற பாடல்களிலும் அதிகமாக உபயோகப் படுத்தப்படுகின்றது. இது கடத்தின் வளர்ச்சியை குறிக்கின்றது.

**மோர்சிங் (அ) முகர் சிங்**

உலோக இசைக்கருவியான இந்த வாத்யம் தமிழகத்தில் விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம் நகரில் செய்யப்படுகின்றது. புதுக்கோட்டை தஷிணாமூர்த்தி ஆச்சாரி அவர்களின் சிஷ்யர் மஹாதேவ

ஐயர் முதன்முதலாக முகர்சிங்கினை கச்சேரியில் வாசித்தார்.

உலகின் தொன்மையான இசைக் கருவிகளுள் ஒன்றாகக் கருதப்படுகிறது மோர்சிங் ஒரு இசைக் கலைஞன் இக்கருவியை வாசிப்பதை கி.மு. 4ம் நூற்றாண்டு சீன ஓவியத்தில் காணலாம் முகச்சங்கு, முகச்சங்கம், நுகர்சங்கு, முகர்சிங், மோர்சிங், என்ற பெயர்களாலும் இவ்வாத்தியம் அழைக்கப்படுகிறது.

**வாத்யத்தின் அமைப்பு**

ஒரு சிறிய கம்பியினாலான மோர்சிங் , என்ற இசைக் கருவி ஒர் அருமையான கன வாத்தியமாகும். இந்த இசைக் கருவியை வாயில் பற்றிக் கொண்டு வாசிப்பதாலும் சங்கு போன்ற வடிவத்தில் உள்ளதாலும் ஹிந்தி மொழி இலக்கியங்களில் , கவிதைகளில் இதை "முகர்சிங்" என்று குறிப்பிட்டுள்ளனர். இதன் நடுவில் இரு புறங்களையும் விட சற்று நீளமான ஒரு நாக்கு போன்ற அமைப்பு பொருத்தப்பட்டுள்ளது. இதில் மெழுகு சேர்த்து ஸ்ருதியின் அளவை கூட்டவோ , குறைக்கவோ முடியும். மோர்சிங் இசைக்கருவி உலகின் பழங்குடியின மக்களிடமிருந்து தோன்றியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது. மிகவும் பழமையான தவில் போன்ற கருவிகள் கூட நாகரிக வளர்ச்சி காரணமாக நவீனத்துவம் பெற்று விட்ட நிலையில் மோர்சிங் மட்டும் இதன் அமைப்பிலோ தயாரிப்பு முறையிலோ எந்த வித மாற்றமும் அடையவில்லை.

பழங்குடியின மக்களிடமிருந்து தோன்றிய கருவியாக இருந்தாலும் கர்நாடக இசைக்கச்சேரிகளில் இதன் பங்கு மிக முக்கியமானது இது ஒரு சுருதி வாத்யமானதால் கச்சேரியில் சுருதியின் நாதத்தையும் மிருதங்கத்தின் சுருதி நாதத்தையும் இது பாடகருக்கு கூடுதலாக கொடுக்கும் இந்த வாத்யம் இரும்பு , எஃகினால் தயாரிக்கப்படுவதால் இதிலிருந்து வெளிப்படும் இரும்பு எஃகின் வெங்கல நாதமும் ஸ்ருதி நாதமும் கேட்பதற்கு மிகவும் ரம்யமாக இருக்கும் மிருதங்கத்தில் வாசிக்கப்படும் ஜதிகள் இதில் வாசிக்கும் போதும் மிருதங்கத்தோடு இணைந்து இதில் சொற்கட்டுகள் வாசிக்கும் போதும் கச்சேரி வெகு ஜோராக களை கட்டும்.

**முகர் சிங்கின் வளர்ச்சி:**

கர்நாடக இசையில் ஒரு முக்கிய உப பக்கவாத்யமாக வாசிக்கப்பட்டு வரும் மோர்சிங்கின் பங்கு பல ஜுகல் பந்திகளிலும் கணிசமான அளவிற்கு இருக்கிறது என்று கூறலாம். மோர்சிங்-கஜோன் (Cajon) மோர்சிங்-டிரம்ஸ்-பியானோ, மோர்சிங்-டிரம்ஸ் கொன்னக்கோல் , மோர்சிங்-மிருதங்கம்-தபேலா போன்றவற்றை உதாரணமாகச் சொல்லலாம். மேலும் தற்காலத்தில் தனி மோர்சிங் கச்சேரிகளும் நிகழ்த்தப்படுகின்றன. சில "இரட்டை மோர்சிங் " (Morsing Duet) கச்சேரிகளாகவும் நடத்தப்படுகிறது. பல மணி நேரங்கள் வாசித்து மிருதங்கத்தில் சாதனை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டதைப் போல ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த கண்டசாலா ஸ்த்யஸாயி என்பவர் தொடர்ந்து 24 மணி நேரம் மோர்சிங் வாசித்து கின்னஸ் சாதனை நிகழ்த்தியுள்ளார். மேலும் இவர் ஸ்டான்லி கிளார்க் (Jazz Fusion Band) பில்லிகோபம் (Billy Cobham American jazz drummer) ஜார்ஜ்டியூக் (American Keyboardist) போன்றவர்களுடன் இணைந்து மோர்சிங் வாசித்துள்ளார்.

**முடிவுரை:**

கர்நாடக சங்கீத உலகில் ஒவ்வொரு வாத்யமும் ஒவ்வொரு சிறப்பைப் பெற்றுள்ளது. அதன் தனி சிறப்புகளைக் கொண்டு கச்சேரிகளில் ரசிகர்களை கவர்ந்ததோடு இல்லாமல் மிக முக்கியமான இடத்தையும் பெறுகின்றன. குன்னக்குடி வைத்யநாதன் , சீர்காழி கோவிந்தராஜன் , மதுரை சோமு மற்றும் பெங்களூரு ரமணி அம்மாள் போன்றோர்கள் மிருதங்கத்துடன் அனைத்து உப

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

பக்கவாத்யங்களையும் சேர்த்து கச்சேரி செய்துள்ளார்கள். இதனை **“Full Bench Concert”** என்பார்கள். காஞ்சி மஹா பெரியவர் அவர்களின் விருப்பத்திற்காக **“வீணா வேணு வயலின் ”** இசைக்கச்சேரி அவர்களது முன்னிலையில் நடைபெற்றது. இதில் பங்கு பெற்ற வித்வான்கள் , சென்னை சுப்ரமணியம் அவர்கள் வீணையும் , லால்குடி ஜெயராமன் அவர்கள் வயலினும் , திரு. ரமணி அவர்கள் புல்லாங்குழலும் வாசித்தார்கள். இவர்களது , இந்த வெற்றியின் தொடர்ச்சியாகவே அனைத்து வாத்ய வித்வான்களும் இணைந்து கச்சேரி செய்யத் தொடங்கினார்கள். பக்கவாத்யம் மற்றும் உப பக்கவாத்யமாக உள்ள லய வாத்யங்கள் மேடையில் நடுநாயகனாக வீற்றிருப்பது என்பது அந்தந்த வாத்யங்களின் வளர்ச்சியைக் குறிக்கின்றது.

.

**துணை நூற்பட்டியல்:**

1. மிருதங்க இசை மரபு – முனைவர் க. தியாகராஜன்
2. தென்னக இசை இயல் – Dr. P. T. செல்லதுரை
3. Musical Instruments of India – S. Krishnaveni
4. தமிழிசை கலைக்களஞ்சியம் தொகுதி 2 – வீ. ப. கா. சுந்தரம்
5. Catalogue of Musical Instruments Exhibited in the Government Museum, Madras, By Prof. Samba Moorthy
6. தென்னிந்திய மரபு இசையியல் – ராஜூ
7. இந்திய இசை கருவூலம் – பக்கிரிசாமி பாரதி